VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1963

THE HON SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1963".

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS APPROPRIATION BILL, 1963 (L.A. BILL NO. 3 OF 1963).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, on behalf of the Minister for Finance, I move—

"That the Madras Appropriation Bill, 1963 (L.A. Bill No. 3 of 1963) be taken into consideration."

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation Bill, 1962 (L.A. Bill No. 3 of 1963) be taken into consideration."

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு சென்னை நிதி ஒதுக்க மசோதாவை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சார்பாக கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து வைத்துள்ளார்கள். குறிப்பாக கொள்கை பற்றிய ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் கூறி என் கருத்தைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். நிதி ஒதுக்க மசோதா மூலம் இந்த ஆண்டு 14 கோடி சில்லரை ரூபாய் துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த கோரிக்கைகள் செலவினங்களின் அவசியமான தன்மையை ஒட்டி வளர்ந்து போகும் தன்மையைப் பார்க்கிறோம். அதற்கேற்ப துணை மதிப்பீட்டில் செலவினங்கள் ஒதுக்க வேண்டிய அவசியம் உள்ளவர்களாக இருக்கிறோம். அவசியமான செலவினங்களுக்கு மதிப்பீடுகள் ஒதுக்க முயற்சி எடுப்பது போல் அனாவசியமான சில செலவினங்களைக் குறைப்பதற்கான முயற்சிகளையும் அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்த வகையில் செலவினத்தைக் குறைக்க முடியுமோ அந்தந்த வகைகளில் எல்லாம் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். சாதாரணமாக அரசாங்க செயல்கள் என்றால் பொதுவாக மக்களிடத்தில் இருந்து வருகின்ற எண்ணம், அரசாங்க செயல்கள் என்றால் செலவினங்கள் அதிகமாகும் என்றும், தனியார் துறையில் என்றால், செலவினங்கள் குறைவாகவே இருக்கும் என்றும் அரசாங்கச்செலவு என்றால் பொருள் விரயமாகும், காலம் விரயமாகும் என்ற பொதுவான நோக்கம்